RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 222 | ஆகஸ்டு.18 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# ரூ.75,000 வரையிலான பயிர்க்கடன் முழுவதுமாக தள்ளுபடி: சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் அறிவிப்பு

சென்னை, ஆக.18-

கூட்டுறவு வங்கிகள் மூலம் பெறப்பட்டுள்ள விவசாயிகளின் பயிர்க்கடன் ரூ.75,000 வரை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படுவதாக தமிழக முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் விதி எண் 110ன் கீழ் அறிக்கை ஒன்று வெளியிட்ட முதல்வர் விஜய், “தமிழக மக்கள் நம் உயிர் என்றால், தமிழக விவசாயிகள் நம் உயிர்நாடி”

உலகில் ஜாதி, மதம், இனம், மொழி என அனைத்து வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்டு நடைபெறும் தொழில் என்றால், அது விவசாயத் தொழில் மட்டுமே. உலகின் ஒரு மூலையில் உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருட்கள், உலகின் மற்றொரு மூலையில் உள்ள மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்கிறது. எந்த நாடு உழவுத் தொழிலை மதித்து, விவசாயிகளுக்கு உரிய பாதுகாப்பையும் ஆதரவையும் வழங்குகிறதோ, அந்த நாட்டில்தான் மக்கள் வளமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ முடியும்.

தமிழக வெற்றிக் கழக அரசு, பல்வேறு நிதி நெருக்கடிகளின் மத்தியில் ஆட்சிப் பொறுப்பேற்றாலும், பதவியேற்ற 15 நாட்களுக்குள், விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்க கடந்த 25.05.2026 அன்று, குறு, சிறு மற்றும் இதர விவசாயிகள் பெற்றிருந்த பயிர்க்கடனில் 50,000 ரூபாய் வரையிலான கடன்களை முழுமையாகத் தள்ளுபடி செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாநிலம் முழுவதும் பல்வேறு விவசாய அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட பயிர்க்கடன் தள்ளுபடி தொடர்பான கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலித்து,

நிதி நெருக்கடியான சூழ்நிலையிலும் விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை மட்டும் கருத்தில் கொண்டு, குறு, சிறு மற்றும் இதர பெரு விவசாயிகளுக்கு 50,000 ரூபாய் வரை முழுத் தள்ளுபடி செய்ய அறிவிக்கப்பட்டதை உயர்த்தி, ரூ.75,000/ வரை கடன் பெற்றவர்களுக்கு முழுத் தொகையையும்,



ரூ.75,000/க்கும் மேல் கடன் பெற்றவர்களுக்கு ரூ.35,000/மும் தள்ளுபடி செய்ய அறிவிக்கப்பட்டு, அதன்மூலம் 14.44 இலட்சம் விவசாயிகளுக்கு ரூபாய் 5,932.23 கோடி அளவிலான கூட்டுறவு பயிர்க்கடன் தள்ளுபடி செய்து 19.06.2026 அன்று ஆணையிடப்பட்டது.

இதில், 31.07.2026 வரை ரூபாய் 5,267 கோடி விடுவிக்கப்பட்டு 13.34 லட்சம் விவசாயிகளின் கணக்கில் வரவும் வைக்கப்பட்டுள்ளது.

இச்சூழ்நிலையில், மாநிலம் முழுவதுமுள்ள விவசாய சங்க அமைப்புகளின் பிரதிநிதிகள் பயிர்க்கடன் தள்ளுபடியை அதிகரிக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துக் கொண்டிருந்தனர். இதனைத் தொடர்ந்து 07.08.2026 அன்று, விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், மூத்த அமைச்சர்கள் மற்றும் துறைச் செயலாளர்களுடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், அவர்களின் கோரிக்கைகள் விரிவாகப் பரிசீலிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் பயிர்க்கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டாலும், அரசால் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்தவேண்டிய தொகை 45 ஆண்டு கால இடைவெளியில் செலுத்தப்பட்டு வந்துள்ளது. 2021ஆம் ஆண்டில் பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்ட தொகை, 2021 முதல் 2026 வரையான காலத்தில் அரசால் 12 தவணைகளாக கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்தப்பட்டுள்ளது.

ஆனால், அந்தக் கால அவகாசம் நமது அரசுக்குத் தற்போது இல்லை. இந்திய ரிசர்வ் வங்கியின் 28.11.2025 ஆம் தேதியிட்ட கடிதத்தில், அரசு கடன் தள்ளுபடி திட்டங்களுக்கான செயல்பாட்டு நடைமுறைகளின்படி பயிர்க்கடன் தள்ளுபடிக்கான முழுத்தொகையையும், அரசானது 45 முதல் 60 நாட்களுக்குள் கூட்டுறவு வங்கிகளுக்கு முழுமையாக செலுத்த வேண்டும் என்ற வழிமுறை நடைமுறையில் வந்துள்ளது.

இந்த வழிகாட்டுதலின் படியும், தமிழ்நாடு அரசின் நிதி நிலை மற்றும் நிதி ஆதாரங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும், இந்த இக்கட்டான சூழ்நிலையிலும், கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட பயிர்க்கடன்களுக்குப் பின்வரும் கூடுதல் தள்ளுபடியை வழங்கிட அரசு முடிவு செய்துள்ளது.

›› 75,000 ரூபாய் வரை பெற்றுள்ள பயிர்க்கடன்கள் 100% முழுமையாக தள்ளுபடி.

›› 75,000 ரூபாய் முதல் 1,00,000 ரூபாய் வரை பெற்றுள்ள பயிர்க்கடன்களுக்கு அதிகபட்சமாக 75,000 ரூபாய் வரை தள்ளுபடி.

›› 1,00,000 ரூபாய்க்கு மேல் பெற்றுள்ள பயிர்க்கடன்களுக்கு அதிகபட்சமாக 35,000 ரூபாய் வரை தள்ளுபடி.

›› இதன்மூலம், 75,000 ரூபாய் முதல் 1,00,000 ரூபாய் வரை பயிர்க்கடன் பெற்றுள்ள 2,38,264 விவசாயிகளுக்குத் தலா 75,000 ரூபாய் வரை தள்ளுபடி வழங்கப்படும்.

இதனால், ஏற்கெனவே, பெற்ற தள்ளுபடித் தொகைக்கு மேலாக 40,000 ரூபாய் வரை கூடுதல் தள்ளுபடி பெறும் வாய்ப்பு ஏற்படும். இந்தக் கூடுதல் பயிர்க்கடன் தள்ளுபடியால் அரசுக்கு சுமார் ரூபாய் 953.06 கோடி கூடுதல் நிதிச்சுமை ஏற்படும், இருந்தாலும், தமிழக விவசாயிகளின் நலனில்தான் நமது நலன் உள்ளது என்று கருதி சுமார் 13.34 லட்சம் விவசாயிகளுக்கு, மொத்தமாக 6,220 கோடி ரூபாய் பயிர்க்கடன் தள்ளுபடியை இந்த அரசு வழங்குகிறது.

## “தவெக அமைச்சர்கள் தங்கள் துறை சார்ந்த பதிலை அளிக்க மறுக்கிறார்கள்” : உதயநிதி விமர்சனம்

சென்னை: ஆக.18-

சட்டப்பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்ததும், உதயநிதி ஸ்டாலின் செய்தியாளர்களிடம் பேசுகையில், “கோவையில் மாணவர் அமுதன் 10 நாட்களுக்கு முன்பு போதைப்பொருள் கடத்துகின்ற கும்பலைப் பற்றி காவல்துறையிடம் விவரங்களையெல்லாம் கூறியதற்காக காவல்துறை என்ன செய்திருக்க வேண்டும்? சரியான நடவடிக்கை எடுத்து, போதைப் பொருளைப் பறிமுதல் செய்திருக்க வேண்டும்.

அந்த மாணவன் அமுதன் யார் மீது புகார் கொடுத்தாரோ, யார் போதைப்பொருள் கடத்துகிறார்கள், யார் விநியோகம் செய்கிறார்கள் என்று கூறினாரோ, அவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். அதற்கு மாறாக, அந்த போதைப்பொருள் விநியோகம் செய்கின்ற கும்பலை அழைத்து, `இந்த அமுதன்தான் உங்களைப் பற்றிய அனைத்து விவரங்களையும் கொடுத்திருக்கிறார்’ என்று கூறியதனால், அந்த போதைப் பொருள் விநியோகம் செய்யும் கும்பல் அமுதனை கிட்டத்தட்ட 20 பேரைக் கொண்ட ஒரு கும்பலாகச் சேர்ந்து அடித்து, 5 நாட்களுக்கு முன்பு படுகொலை செய்திருக்கிறார்கள்.

அதுமட்டுமன்றி, திருவொற்றியூரில் இதேபோல தனுஷ் என்ற மாணவர், 20 பேர் கொண்ட ஒரு கும்பலால் தாக்கப்பட்டு பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். இப்படித் தொடர்ந்து போதைப்பொருளால் இன்றைக்குப் பல்வேறு சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்பட்டு இருக்கின்றன.

இதையெல்லாம் சுட்டிக்காட்ட வேண்டும் என்று இந்த அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்வதற்காக இன்றைக்கு நாம் மட்டுமல்ல, எதிர்க்கட்சித் தலைவர்கள், அனைத்துக் கட்சித் தலைவர்களும் சட்டமன்றத்தில் அரசின் கவனத்தை ஈர்த்துப் பேசியிருக்கிறோம்.

ஆனால், இதற்கெல்லாம் எந்தவிதமான ஒரு சரியான பதிலும் இந்த அரசிடம் இல்லை. மாறாக எங்கள் மீது மீண்டும் குற்றச்சாட்டு வைக்கிறார்கள். தங்களது ஆட்சியில் என்ன செய்தீர்கள் என்று ஒரு தெளிவான விளக்கம் இல்லாமல், எங்கள் மீது மீண்டும் பழியைப் போடுகின்ற வழக்கத்தையே இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

அதுமட்டுமன்றி, நான் பலமுறை இந்த மூன்று மாதங்களாகச் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். எந்தத் துறைக்கு யார் அமைச்சர் என்பதே சரியாகத் தெரியவில்லை. அதற்கு என்ன காரணம் என்றால், இந்த அரசில் அந்தந்தத் துறை அமைச்சர்கள் அந்தந்த துறைக்கான பதிலையே சொல்ல மறுக்கிறார்கள்.

இன்றைக்கு சட்டம் ஒழுங்கைப் பற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறோம், போதைப் பொருள் தடுப்பைப் பற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறோம். இதற்கு முழுப் பொறுப்பேற்க வேண்டியவர் யார் என்பது மக்களுக்குத் தெரியும். அந்த அமைச்சர் இன்றைக்கு அவைக்கு வரவே இல்லை. அதற்கான பதிலையும் அவர் சொல்லவே இல்லை. இதையெல்லாம் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு வெளிநடப்பு செய்திருக்கிறோம்.” என்றார்.

பின்னர் செய்தியாளர்கள், ‘மீண்டும் அவை நடவடிக்கையில் கலந்து கொள்வீர்களா?’ என கேட்டதுக்கு, “மீண்டும் அவை நடவடிக்கையில் கலந்துகொள்வோம். முறையான பதில் வேண்டும் என்றுதான் கேட்கிறோம். அதற்கான அமைச்சர்தான் வரவில்லையே? அமைச்சர்தானே எழுந்து பதில் சொல்ல வேண்டும்? சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் யார் என்பது மக்களுக்குத் தெரியும்” என்றார்.

பின்னர், ‘நீங்கள் சொன்ன குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இருக்கிறதா எனக் கேட்கிறாரே?’ என்ற கேள்விக்கு, “அந்த காணொலி எப்போது வெளியே வந்தது? ஒரு மாதத்திற்கு முன்னால் வந்தது. அப்படி காணொலி வந்தால், வந்த உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படியென்றால் இந்த அரசுதானே நடவடிக்கை எடுக்க வேண்டும்? அவரை அழைத்து விசாரித்தார்களா? அப்படியென்றால், அந்த அமைச்சர் ஒப்புக்கொள்கிறாரா, அது போதைப் பொருள்தான் என்று ஒப்புக்கொள்கிறாரா?” என்றார்.

பின்னர், மைதானத்தைச் சுற்றிலும் காவல்துறை இருந்தது என்கிறாரே? என்ற செய்தியாளர்கள் சுட்டிக்காட்ட, “அப்படியென்றால், அது போதைப் பொருள்தான் என்று ஒப்புக்கொள்கிறாரா? நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்த வீடியோ எப்போது வந்தது? ஒரு மாதத்திற்கு முன்பு வந்தது. எனவே இந்த அரசு அவரை அழைத்து நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். எங்களுடைய அரசாக இருந்திருந்தால், நிச்சயம் நடவடிக்கை எடுத்திருப்போம். ஆனால் இந்த வீடியோ வெளிவந்ததே இப்போதுதான்” என்று உதயநிதி கூறினார்.

## தமிழ்த்தாய் வாழ்த்தை 3வதாக பாடுவது அவமதிப்பு அல்ல: குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் கருத்து


திருவாரூர்: ஆக,18-

சொந்த நாட்டையும், பெற்ற தாயையும் யாரும் அவமானப்படுத்த மாட்டார்கள் என்பதைப் போல தமிழ்த்தாய் வாழ்த்தையும் மூன்றாவதாக பாடுவதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் கருத்து தெரிவித்துள்ளார்.

திருவாரூரில் தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தின் 11 வது பட்டமளிப்பு விழா இன்று நடைபெற்றது. பல்கலைக்கழக வேந்தர் பத்மநாபன் தலைமை வகித்தார், துணைவேந்தர் சுலோச்சனா சேகர் வரவேற்றார், தமிழக பொறுப்பு ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர், நாகை எம்.பி செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இவ்விழாவில், குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, தங்கப் பதக்கம் வென்ற 50 மாணவ, மாணவிகளுக்கு பதக்கங்கள் மற்றும் பட்டங்களை வழங்கி பாராட்டினார். அதனை தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் 1,053 மாணவ, மாணவிகள் பட்டம் பெற்றனர்.

பின்னர் விழாவில் பேசிய குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், “பல்துறை கல்வி, ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் விழுமிய அடிப்படை



யிலான கற்றலுக்கு முக்கியத்துவம் அளிப்பதன் மூலம் தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம் இந்த நோக்கத்தைச் சிறப்பாக முன்னெடுத்து வருவது பாராட்டுக்குரியது.

பெண்களின் உயர்கல்விச் சேர்க்கை 201415ம் ஆண்டில் 1.57 கோடியிலிருந்து 202324ம் ஆண்டில் 2.24 கோடியாக, அதாவது 42.2 சதவீதம் அதிகரித்துள்ளது.

நான் செல்லும் பல்வேறு பட்டமளிப்பு விழாக்களில் ஆண்களை விட அதிக எண்ணிக்கையில் பெண்கள் பட்டங்களை பெறுகின்றனர். இது வரவேற்கக் கூடிய ஒன்று. பட்டம் பெறும் மாணவர்கள், வகுப்பறைகளை விட்டு வெளியேறினாலும், கற்றலை ஒருபோதும் விட்டுவிடக்கூடாது. இன்று பெறும் பட்டம், வாழ்நாள் முழுவதும் தொடரும் அறிவுத் தேடலின் தொடக்கம் மட்டுமே. எந்த தொழிலை தேர்ந்தெடுத்தாலும், நாட்டின் வளர்ச்சிக்கு உதவிட வேண்டும்.

பிரதமர் மோடியின் தொலைநோக்குத் தலைமையின் கீழ், சுதந்திரத்தின் நூற்றாண்டை ஒட்டி வளர்ச்சியடைந்த, அனைவரையும் உள்ளடக்கிய, புதுமையான மற்றும் நிலையான நாட்டை உருவாக்கும் “Viksit Bharat @2047” என்ற இலக்கை நாடு முன்னெடுத்து வருகிறது. அதனை நிறைவேற்றுவதில் இளைஞர்களின் ஆற்றல், கற்பனைத் திறன் மற்றும் தலைமைத்துவம் முக்கியமானவை.

ஒவ்வொரு செயலிலும் தேசமே முதன்மை என்ற எண்ணத்தை மாணவர்கள் மனதில் கொள்ள வேண்டும். சமீபத்தில் நாடாளுமன்றத்தில் பொதுத் தேர்வுகள் (நியாயமற்ற வழிமுறைகள் தடுப்பு) திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டது. தேர்வு முறையில் முறைகேடுகளைத் தடுப்பதும், மாணவர்களின் நலன்களைப் பாதுகாப்பதும் மிகவும் முக்கியம்.

நான் ஜார்க்கண்ட் ஆளுநராக இருந்தபோது, இதே நோக்கத்தைக் கொண்ட சட்டத்தை அம்மாநில அரசு நிறைவேற்றியது. அந்தச் சட்டத்துக்கு உடனடியாக கையெழுத்திட்டு அது சட்டமாக வழிவகுத்தேன் பொதுத்தேர்வு முறையின் நேர்மையையும், வெளிப்படைத் தன்மையையும் உறுதி செய்வதில் இதுபோன்ற சீர்திருத்தங்கள் முக்கியமானவை.

இளைஞர்களின் எதிர்காலத்தைச் சீரழிக்கும் போதைப்பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்த காவல் துறை இது தொடர்பான குற்றவாளிகள் மீது எந்த ஒரு கருணையும் காட்டக் கூடாது. இளைஞர்கள் ஒவ்வொருவரும் போதைப் பொருட்களை தவிர்ப்பது மட்டுமல்லாது, உங்கள் நண்பர்களும் போதைப் பொருளிலிருந்து விலகி இருக்க ஊக்கப்படுத்த வேண்டும்.

இப்போதெல்லாம் எந்த ஒரு செயலையும் அரசியல் மையப்படுத்தி வருகின்றனர். அண்மையில், தமிழக முதல்வர் மற்றும் முன்னாள் முதல்வர்கள் 2 பேர், இருந்த அவையில் தமிழ்த்தாய் வாழ்த்து முதன்மையாக பாடப்பட வேண்டும் என தெரிவிக்கின்றனர்.

தமிழ்த்தாய் வாழ்த்தை மூன்றாவதாக பாடுவதால், அதனை அவமானப்படுத்துவதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. சொந்த நாட்டையும், பெற்ற தாயையும் யாரும் அவமானப்படுத்த மாட்டார்கள் என்பதைப் போல தமிழ்த்தாய் வாழ்த்தையும் மூன்றாவதாக பாடுவதை எடுத்துக் கொள்ள வேண்டும்” என்று சி.பி.ராதாகிருஷ்ணன் கூறினார்.

## “டிஜிட்டல் யுகத்திலும் தேர்வு நடத்துவதில் மோடி அரசு தோல்வி” : மாணிக்கம் தாகூர்

சென்னை: ஆக.18-

தொழில்நுட்பம் கோலோச்சும் இந்த டிஜிட்டல் யுகத்திலும், ஒரு தேர்வைக் கூடச் சரியாக நடத்த முடியாத மோடி அரசின் அலட்சியத்தால் மாணவர்களின் வாழ்க்கை நடுத்தெருவில் நிற்பதாக தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் காட்டமாக தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “87 பாடப்பிரிவுகளில் அல்லும் பகலும் படித்து, தங்கள் கடின உழைப்பையும் அர்ப்பணிப்பையும் முழுமையாக வெளிப்படுத்தி மாணவர்கள் தேர்வு எழுதுகிறார்கள். ஆனால், மோடி அரசின் நிர்வாகச் சீர்கேடும் தோல்வியடைந்த அமைப்பும் நாட்டின் லட்சக்கணக்கான இளம் மாணவர்களின் ஒட்டுமொத்த எதிர்காலத்தையே பாழாக்கியுள்ளது.

‘தேர்வுப் போராளிகள்’ என்று கவர்ச்சிகரமான வார்த்தைகளில் வாழ்த்துச் சொல்லும் பிரதமரே, மாணவர்கள் நிஜ வாழ்க்கையில் உங்கள் தேசிய தேர்வு முகமையின் குளறுபடிகளோடும்தான் போராட வேண்டுமா?

தவறுகள் முழுமையாக தேர்வு முகமையின் பக்கம் இருக்கும்போது, அமைப்பின் தோல்விகளுக்குத் துளியும் பொறுப்பேற்காமல் மத்திய அரசு தட்டிக்கழிப்பதும், அதற்கான அலைச்சலையும் மன உளைச்சலையும் அப்பாவி மாணவர்கள் மட்டுமே சுமப்பதும் என்ன நியாயம்?

அடிப்படை முறைகேடுகளும் குளறுபடிகளும் தர்மேந்திர பிரதான் கல்வி அமைச்சராக இருந்த காலத்திலேயே அரங்கேறின. மாணவர்களின் தொடர் போராட்டங்களாலும், எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியின் அழுத்தத்தாலும் அவர் பதவி விலகிய பின்னரும்கூட, நாடாளுமன்றத்தில் அவரைக் கொண்டாடிப் பாராட்டியது இதே பாஜக அரசுதான். இப்போது கல்வித் துறையைப் பொறுப்பேற்றுள்ள பிரஹலாத் ஜோஷியும், பிரதமரும் இதற்குப் பதில் சொல்லியே தீர வேண்டும்.

இந்தத் தொடர் நிர்வாகத் தோல்விக்கு நீங்களும் முழுப் பொறுப்பாளி. தொழில்நுட்பம் கோலோச்சும் இந்த டிஜிட்டல் யுகத்திலும், ஒரு தேர்வைக்கூடச் சரியாக நடத்த முடியாத மோடி அரசின் அலட்சியத்தால் மாணவர்களின் வாழ்க்கை நடுத்தெருவில் நிற்கிறது.

நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியது போல, மாணவர்களுக்கு இந்த தேசிய தேர்வு முகமை என்பது முழுமையாக நம்பகத்தன்மையை இழந்த நம்பிக்கை இல்லா முகமை. உங்கள் நிர்வாகத் தோல்விகளுக்கு அப்பாவி மாணவர்களை இன்னும் எத்தனை காலம் பலிகடா ஆக்கப் போகிறீர்கள்?” என்று மாணிக்கம் தாகூர் தெரிவித்துள்ளார்.

மாலை தந்தி

செவ்வாய்கிழமை 18.08.2026



■ மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், வடபழஞ்சி ஊராட்சிக்குட்பட்ட வெள்ளை பாரப்பத்தி கிராமத்தில் VB-G RAM G திட்டத்தின் கீழ் ரூ.9.70 இலட்சம் மதிப்பீட்டில், 45 மீட்டர் நீளம் மற்றும் 35 மீட்டர் அகலம் கொண்ட பரப்பளவில் ஊரணி அமைக்கும் பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா,நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# அகில பாரத ஐயப்ப சேவா பொதுக்குழு கூட்டம்: சபரிமலை சேவைக்கு அனுமதி கோரி தீர்மானம்

மதுரை, ஆக.18-

அகில பாரத ஐயப்ப சேவா சங்க மதுரை மாவட்ட யூனியன் பொதுக்குழு கூட்டம் கள்ளந்திரி சாஸ்தா முதியோர் இல்லத்தில் மாவட்ட தலைவர் ஐ.குருசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட செயலாளர் வி.பாலமுருகன் வரவேற்புரையாற்றி, 2025ஸ்ரீ26ம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை சமர்ப்பித்தார். பொருளாளர் த.சின்னச்சாமி வரவு-செலவு கணக்குகளை தாக்கல் செய்து, பொதுக்குழுவின் ஒப்புதலை பெற்றார்.

தமிழ்நாடு மாநில அமைப்பின் தலைவர் மு.விஸ்வநாதன் சிறப்புரையாற்றினார். அப்போது, சபரிமலையில் அகில பாரத ஐயப்ப சேவா சங்கம் மூலம் சேவைகள் தொடர்ந்து நடைபெறுவதற்காக மத்திய அமைப்பு சார்பில் கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

பொதுக்குழுவில், சபரிமலைக்கு வரும் தமிழக ஐயப்ப பக்தர்களுக்கு தங்குமிடம் மற்றும் அன்னதான வசதிகளை ஏற்படுத்த தமிழக, கேரள அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக சன்னிதானம், பம்பா, கரிமலை, பெரியானை வட்டம், அழுதை உள்ளிட்ட பகுதிகளில் சங்கம் சார்பில் அன்னதானம், மூலிகைக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மண்டலஸ்ரீமகர விளக்கு காலங்களில் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து வரும் பக்தர்களுக்கு அன்னதானம் மற்றும் மருத்துவ உதவிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த சேவைகளை தொடர்ந்து மேற்கொள்ள தமிழக அரசு, கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி உரிய அனுமதியை பெற்றுத்தர வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. சபரிமலை சீசன் முழுவதும் பக்தர்களுக்கு சேவை செய்ய சங்கத்தின் சார்பில் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் தயாராக உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் குருசாமி, என்.ராஜதுரை, எம்.மனோகரன், பி.மணி மற்றும் மாவட்ட நிர்வாகிகள், தொண்டர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். முடிவில் முதியோர் இல்ல பொறுப்பாளர் த.சின்னச்சாமி நன்றி கூறினார்.

# 80வதுசுதந்திர தினத்தை முன்னிட்டு மதுரையில் கிராமசபை கூட்டம்

மதுரை,,ஆக.18-

80 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மதுரையில் 13 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட கிராம ஊராட்சிகளில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. மதுரை மாவட்டம் கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இளமனூர் கிராமத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் ஊராட்சி செயலாளர் ராஜபிரபு தீர்மானங்களை வாசித்து பொதுமக்களிடம் விளக்கினார். ஆண்டார்கொட்டாரம் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் ஊராட்சி செயலாளர் முத்துக்குமார் தீர்மானங்களை வாசித்து பொதுமக்களிடம் விளக்கினார். இதேபோல் ஒத்தக்கடை ஊராட்சியில் ஊராட்சி செயலாளர் மணிகண்டன், நரசிங்கம் ஊராட்சியில் ஊராட்சி செயலாளர் சசிகுமார், சிலைமான் ஊராட்சியில் ஊராட்சி செயலாளர் சுரேஷ், நாகமலை புதுக்கோட்டை ஊராட்சி செயலாளர் கண்ணன் ஆகியோர் தீர்மானங்களை நிறைவேற்றி பொது மக்களிடம் விளக்கினர். கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொதுநிதி செலவினம், தூய்மையான குடிநீர் விநியோகத்தினை உறுதி செய்தல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், சிறுபாசன குளங்கள் மற்றும் ஏரிகள் புதுப்பித்தல், ஜல் ஜீவன் திட்டம், தூய்மை பாரத இயக்கத்திட்டம் மற்றும் இதர கூட்டப்பொருட்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.








# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து 510 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது

சிவகங்கை, ஆக.18-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், அரசு அலுவலர்கள் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று, கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தனர்.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித்தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித்தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொதுமக்களிடமிருந்து 510 மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள் உட்பட அரசின் பல்வேறு துறைகளை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஜெயந்திநகர் மகாசக்தி மாரியம்மன் திருக்கோவிலில் ஆடி மாத கஞ்சிகளையம் பூஜை

நீலகிரி,ஆக.18-

குன்னூர் தாலுகா வெலிங்டன் கண்டோண்மென்ட் பகுதிக்கு உட்பட்ட ஜெயந்திநகர் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு மகாசக்தி மாரியம்மன் திருக்கோவிலில் ஜெயந்திநகர் மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி குழுவினர்கள் சார்பில் ஆடி மாதம் கஞ்சிகளையம் பூஜை மிக சிறப்பாக நடைபெற்றது.

ஜெயந்திநகர் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குழுவினர் பிளாக்பிரிட்ஜ் பகுதியில் அமைந்துள்ள கன்னிமார் திருக்கோவிலிருந்து கஞ் சிகளையம் ஊர்வலமாக. எடுத்து வந்து ஜெயந்திநகர் மகாசக்தி மாரியம்மன் திருக்கோவில் வந்தடைந்தனர்.





பின்பு ஜெயந்திநகர் மகாசக்தி மாரியம்மன் திருக்கோவிலில் ஆடி மாத கஞ்சிகளையம் பூஜை மிக சிறப்பாக நடைபெற்றது. பக்தர்கள் பூஜையில் கலந்து கொண்டு அம்மனின் தரிசனம் பெற்றனர். பின்பு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.



# ஜோலார்பேட்டை நகராட்சியில் 80 வது சுதந்திர தின விழா

ஜோலார்பேட்டை, ஆக.18-

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை நகராட்சியில் 80 வது சுதந்திர தின விழா நகர மன்ற தலைவர் காவியா விக்டர் தலைமையில் ஆகஸ்ட் 15 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜோலார்பேட்டை நகராட்சி ஆணையாளர் இளையராணி அனைவரையும் வரவேற்பு நிகழ்த்தி அனைவருக்கும் சுதந்திர தின வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து தேசியக் கொடியை ஏற்றி வைத்த நகர மன்ற தலைவரும் நகராட்சி ஆணையர் இளையராணி அவர்களும் தேசியக் கொடியேற்றி மரியாதை செலுத்தினார்கள்.

தொடர்ந்து அனைத்து தூய்மை பணியாளர்களுக்கும் அறிவுரைகள் வழங்கினார்கள். சிறப்பாக பணியாற்றிய 5 தூய்மை பணியாளர்களுக்கு சால்வை அணிவித்து கௌரவப்படுத்தினார்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டு இறுதியாக ஜோலார்பேட்டை நகராட்சி பொறியாளர் சங்கர் நன்றியுரை வழங்கினார்.

உடன் ஜோலார்பேட்டை நகர மன்ற உறுப்பினர்கள் புன்னகை கமலாசேகரன் ஏழுமலை சிவக்குமார் வித்தியாசுரேஸ் சுதா சாந்தி மற்றும் தூய்மை பணியாளர்கள் நகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



■ திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் பள்ளிக்கல்வித்துறை சார்பாக மாவட்ட அளவிலான சைக்கிள் போட்டி மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் குணசுந்தரி தலைமையில் 16/08/20026 அன்று நடைபெற்றது. திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் இருந்து சைக்கிள் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களை மூன்று பிரிவுகளாக பிரித்து போட்டியை துவக்கினார்கள். சிறப்பு விருந்தினராக மாவட்ட விளையாட்டு அலுவலர் ஜெயக்குமாரி மற்றும் ஜோலார்பேட்டை உதவி காவல் ஆய்வாளர் கார்த்திக் கொடி அசைத்து துவக்கி வைத்தார்கள். இதில் வெற்றி பெறும் மாணவ மாணவிகள் மாநில அளவிலான போட்டிக்கு தேர்வு செய்யப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் உடற்கல்வி ஆசிரியர்கள் ஆசிரியைகள் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்கள் மாணவிகள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



■ கிருஷ்ணகிரி தம்மன்னநகர் நாகம்மாள் திருக்கோயிலில் நாக சதுர்த்தியை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. கணபதி, நவகிரக, நாகம்மன் உள்ளிட்ட ஹோமங்களுடன் மஹா அபிஷேகம், சிறப்பு அலங்காரம் மற்றும் தீபாராதனை நடந்தது. சின்னதக்கேப்பள்ளி நாகவனத்தில் 18ம் ஆண்டு நாக சதுர்த்தியை முன்னிட்டு பெண்கள் பால் குட ஊர்வலம் நடத்தினர். 52 கிராமங்கள் மற்றும் கர்நாடகா, ஆந்திராவை சேர்ந்த பக்தர்கள் பங்கேற்று உலக நலன், மழை வேண்டி பால் அபிஷேகம் செய்தனர்.



# தேனி சின்னமனூர் நகராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வைத்திநாதன் நேரில் ஆய்வு

சின்னமனூர் ஆக.18-

தேனி மாவட்டம், சின்னமனூர் நகராட்சிப் பகுதியில் நகராட்சி நிர்வாகம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்தஆய்வின்போது, சின்னமனூர் அரசு மருத்துவமனை வளாகத்தில்

15ஆவது நிதி ஆணையம் ஸ்ரீ சுகாதார நிதித்திட்டத்தின் கீழ் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் மருத்துவமனை கட்டிடத்தையும், 15 ஆவது நிதி ஆணைய திட்டத்தின் கீழ் ரூ.46 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கால்நடை பிறப்பு கட்டுப்பாட்டு மையக் கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மீதமுள்ள பணிகளையும் விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவருமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, சின்னமனூர் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தினை பார்வையிட்டு, போட்டித்தேர்வுகளுக்கு பயின்று வரும் மாணவர்களுடன் கலந்துரையாடி, போட்டித்தேர்வுகளுக்கு தேவைப்படும் புத்தகங்கள் மற்றும் பாடக்குறிப்புகள் குறித்து கேட்டறிந்து, வருகைப்பதிவேடு, உறுப்பினர்களின் எண்ணிக்கை, நூலக புத்தகப் பதிவேடு உள்ளிட்டப் பதிவேடுகள் மற்றும் குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், சின்னமனூர் நகராட்சி தொடக்கப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திடீர் ஆய்வு மேற்கொண்டு, பள்ளியில் பயிலும் மாணவர்களுடன் கலந்துரையாடி, மாணவர்களின் கற்றல் திறன் குறித்தும், அடிப்படை வசதிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், சின்னமனூர் நியாயவிலைக் கடைக்குச் சென்று அத்தியாவசியப் பொருட்களின் தரம் மற்றும் இருப்பு குறித்து பார்வையிட்டு, அத்தியாவசியப் பொருட்களை பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி வழங்க பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வில் நகராட்சி ஆணையாளர் (பொ).உமாசங்கர், நகராட்சிப் பொறியாளர். சரவணக்குமார், கோட்டப்பொறியாளர் (தமிழ்நாடு மின்சார வாரியம்) சந்திரமோகன், வட்டாட்சியர் (உத்தமபாளையம்) பாலசண்முகம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



# முரசொலி மாறன் 92வது பிறந்தநாள் விழா

கிருஷ்ணகிரி, ஆக.18-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பில், முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறனின் 92வது பிறந்தநாள் விழா கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ் தலைமை வகித்தார். விழாவில் முரசொலி மாறனின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. தொடர்ந்து கட்சி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செங்குட்டுவன், நகர பொறுப் பாளர்கள் அஸ்லம், வேலுமணி,மாநில விவசாய அணி டேம் வெங்கடேசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி சி ஆர் தினேஷ் ராஜன், மாவட்ட பொருளாளர் கதிரவன், பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ், மாவட்டத் துணைச் செயலாளர் கோவிந்தசாமி உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள், முன்னாள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

விழா ஏற்பாடுகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தே.மதியழகன், Ex MLA, ஏற்பாட்டில் கட்சி நிர்வாகிகள் செய்திருந்தனர்.

# CHANGE OF NAME

I, **RAMJANKANI ALIS NISHA,** born on 05/06/1987, Native District Sivagangai, residing at Door No. 4/134, Thaikkal Nagar, Rajagambiram, Manamadurai Taluk, Sivagangai District - 630 609, Tamil Nadu, have changed my name from **RAMJANKANI ALIS NISHA to RAMJANKANI NISHA** and shall henceforth be known as **RAMJANKANI NISHA** for all purposes.

**- RAMJANKANI ALIS NISHA**

# தாம்பரத்தில் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெற்ற ஒரு நாள் ஹாக்கி போட்டி

தாம்பரம், ஆக.18-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, தாம்பரம் TTK நகர் SDAT மைதானத்தில் தாம்பரம் ஹாக்கி கிளப் சார்பில் ஒரு நாள் ஹாக்கி போட்டி சிறப்பாக நடைபெற்றது.

இப்போட்டியில் 10 க்கும் மேற்பட்ட ஹாக்கி அணிகள் கலந்து கொண்டு, தங்களது திறமைகளை வெளிப்படுத்தி சிறப்பாக விளையாடினர்.

போட்டியின் முடிவில் முதல் பரிசு குரோம்பேட்டை ரெட் ஸ்டார் அணி, இரண்டாம் பரிசு தாம்பரம் ஹாக்கி கிளப் அணி இரண்டு அணியினருக்கு பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது

இந்நிகழ்வில் sports exnora தலைவர் T.G.R. பாபு, தாம்பரம் ஹாக்கி கிளப் பொதுச் செயலாளர் விக்கி (எ) விக்னேஸ்வரன், சிறகுகள் அணியின் பயிற்சியாளர் மதி, தாம்பரம் ஹாக்கி கிளப் நிர்வாகி கார்த்திகேயன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீரர்கள் மற்றும் அனைத்து அனைவருக்கும் கோப்பைகள் மற்றும் பதக்கங்களை வழங்கினார்.

இந்நிகழ்வு இளம் ஹாக்கி வீரர்களை ஊக்குவிக்கும் வகையிலும், தாம்பரம் பகுதியில் ஹாக்கி விளையாட்டை மேலும் வளர்க்கும் வகையிலும் சிறப்பாக அமைந்தது.












# காந்தி, வீரமங்கை வேலுநாச்சியார் சிலைகளுக்கு ஆட்சியர் மரியாதை

சிவகங்கை, ஆக.18-

சுதந்திர தினத்தை முன்னிட்டு சிவகங்கை நகராட்சியில் அமைந்துள்ள தேசப்பிதா அண்ணல் மகாத்மா காந்தியடிகளின் திருவுருவச்சிலைக்கு மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து சிவகங்கை சூரக்குளத்தில் அமைந்துள்ள வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டபத்தில், சுதந்திரப் போராட்ட வீராங்கனை இராணி வீரமங்கை வேலுநாச்சியாரின் திருவுருவச்சிலைக்கும் அவர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் தே.ஜெ.ஃபி கிரேசியா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சு.ஜெகவீரபாண்டியன் உள்ளிட்டோர் இருந்தனர்.



# ஸ்ரீ பவானி அம்மன் ஆலயத்தில் ஆடிமாத திருவிழா கோலாகலம்

மாதவரம், ஆக.18-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் கிராண்ட்லையன் ஊராட்சி கட்டபொம்மன் சாலை தர்மலிங்கம் தோட்டத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பவானி அம்மன் ஆலயத்தில் 11ம் ஆண்டு ஆடிமாத திருவிழா ஆலய நிர்வாகி குமுதவள்ளி, தலைவர் ஆறுமுகம், துணைத்தலைவர் ரமணா, செயலாளர் சீனிவாசன், பொருலாளர்கள் ஜானகிராமன், முருகேஸ்வரி, துணை செயலாளர்கள் ராஜா, வீரப்பன், கௌரவத்தலைவர்கள் தட்சணாமூர்த்தி, கமலக்கண்ணன், விழாகுழு உறுப்பினர்கள் சிவஞானம், ரரேஷ், அர்ஜூன்ராஜா, சக்திவேல், சரவணன், மோகன், சீனிவாசன், வெங்கடேசன் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பந்த கால்நடுதல், பதிவிளக்கு பூஜை, காப்புகட்டுதல், கரகம் எடுத்தல், பால்குடம் எடுத்தல், தாய்வீட்டு சீர்வரிசை எடுத்தல், பொங்கல் வைத்தல் மற்றும் அம்மனுக்கு பல்வேறு வாசனை திரவியங்கல் உட்பட 108 இளநீர் அபிஷேகம் செய்து வண்ணமலர்கள் மற்றும் சந்தனகாப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து அம்மன் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாளவான வேடிக்கைவுடன் திருவீதி உலாநடைபெற்றது. பின்னர் கூழ்வார்த்தல், கும்பம் படையல்பூஜை போன்ற சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இத்திருவிழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர். முடிவில் அம்மனுக்கு விடையாற்று மஞ்சள்நீராட்டு நடைபெற்றது.

# நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு செய்திக்குறிப்பு

நீலகிரி, ஆக.18-


நீலகிரி மாவட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக மாவட்ட அளவிலான ஒருங்கிணைந்த உறுதிமொழி மற்றும் தூய்மைப் பணிகள் (Mass Cleaning) 20.08.2026 வியாழக்கிழமை அன்று மேற்கொள்ள மாவட்ட நிர்வாகத்தால் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்குறிப்பிட்ட நாளன்று அனைத்து அரசு அலுவலகங்கள், அரசு மற்றும் தனியார் பள்ளிகள், கல்லூரிகள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள், பொதுத்துறை வங்கிகள், உணவகங்கள், வணிக வளாகங்கள், சந்தைகள், பொது இடங்கள் உட்பட நீலகிரி மாவட்டத்திலுள்ள அனைத்து பொது மற்றும் தனியார் நிறுவனங்களிலும் திடக்கழிவு மேலாண்மை விழிப்புணர்வு உறுதிமொழியினை ஏற்று அன்றைய தினம் தங்கள் வளாகங்களில் தூய்மைப்பணிகள் (Mass Cleaning) மேற்கொண்டு சேகரிக்கப்படும் குப்பைகளை தரம் பிரித்து அருகில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்குமாறும், மேலும், இதன் வெற்றிக்கு பொதுமக்களின் பங்களிப்பு மிக முக்கியமானது என்பதால் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் வார்டு வாரியாக நியமிக்கப்பட்டுள்ள தன்னார்வலர்களின் பங்களிப்போடு 20.08.2026 வியாழக்கிழமை அன்று நடைபெறவுள்ள மாவட்ட அளவில் மேற்கொள்ளப்படும் திடக்கழிவு மேலாண்மை தூய்மைப் பணிக்கு (Mass Cleaning) பொதுமக்கள் மற்றும் அனைத்து துறை அலுவலர்களும் உறுதுணையாக இருக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு இஆப. அவர்களால் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

# அத்திவாக்கம் கோட்டூர் அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தில் ஆடிமாத திருவிழா

மாதவரம், ஆக.18-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி அத்திவாக்கம் கோட்டூர் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தில் ஆடிமாத திருவிழா ஆலய நிர்வாக குழுவினர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் அம்மனுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை



காண்பிக்கப்பட்டது. இதணைத்தொடர்ந்து அம்மனுக்கு கூழ்வார்த்தல், கும்பம் படையல்பூஜை போன்ற சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இதில் ஆலய அனைத்துநிலை பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# கன்னியாகுமரி போக்குவரத்து போலீசார் வாகன தணிக்கையில் தெளிவான பதிவு எண் இல்லாத 18 இருசக்கர வாகனங்கள் மீது மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் நடவடிக்கை

கன்னியாகுமரி, ஆக.18-

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் R.ஸ்டாலின் உத்தரவின் படி போக்குவரத்து காவல்துறை சார்பாக நகரின் முக்கியப் பகுதிகளில் அதிரடி வாகன தணிக்கை (Vehicle Check) மேற்கொள்ளப்பட்டது.

பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து விதிகளை முறைப்படுத்தும் நோக்கில் இந்த தணிக்கை நடத்தப்பட்டது. அப்போது, கன்னியாகுமரி போக்குவரத்து போலீசார் சோதனை மேற்கொண்ட பொழுது மோட்டார் வாகன சட்ட விதிகளின் படி சரியாக நம்பர் பிளேட் பொருத்தாமல் (Defective number plate) இயக்கப்பட்ட 18 வாகனங்களை போக்குவரத்து காவல் துறையினர் கண்டறிந்தனர்.

விதிமுறைகளை மீறி, தெளிவற்ற மற்றும் முறையற்ற எண் பலகைகளுடன் இயங்கிய அந்த 18 வாகனங்களுக்கும் அபராதம் விதிக்கப்பட்டது மேலும், அந்த வாகனங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், சம்பவ இடத்திலேயே புதிய மற்றும் சரியான விதிமுறைப்படியிலான நம்பர் பிளேட்டுகளை பொருத்த உத்தரவிடப்பட்டது.

இதனையடுத்து, வாகன ஓட்டிகள் தங்களது வாகனங்களின் எண் பலகைகளைச் சரி செய்த பின்னரே, காவல்துறையினர் அந்த வாகனங்களை அங்கிருந்து செல்ல அனுமதித்தனர். பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் அனைவரும் தங்களது வாகனங்களில் அரசு விதித்துள்ள விதிமுறைகளின்படி, தெளிவான எண் பலகைகளைப் பொருத்த வேண்டும் என்றும், போக்குவரத்து விதிகளுக்குக் கீழ்ப்படிந்து காவல்துறைக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கன்னியாகுமரி மாவட்ட போக்குவரத்து காவல்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

# கன்னியாகுமரி மாவட்டத்தில் சித்த மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டும்

கன்னியாகுமரி, ஆக.18-

கன்னியாகுமரி மாவட்டத்தில் சித்த மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டும் என சட்டமன்றத்தில் கன்னியாகுமரி தொகுதி எம்எல்ஏ தளவாய் சுந்தரம் வலியுறுத்திப் பேசினார்.



அப்போது பேசிய அவர், 7.5 சதவீத இடஒதுக்கீட்டை பெற்றுத் தந்தவர் முன்னாள் முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி என்றும், அதிமுக ஆட்சியில் நீட் தேர்வு கொண்டு வரப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

மேலும், 11 அரசு மருத்துவக் கல்லூரிகளை கொண்டு வந்ததும், 6 புதிய மாவட்டங்களை உருவாக்கியதும் எடப்பாடி கே. பழனிசாமி என அவர் குறிப்பிட்டார்.

நீட் தொடர்பான அறிவிக்கை 20112012ஆம் ஆண்டிலேயே வெளியிடப்பட்டதாகவும் தளவாய் சுந்தரம் எம்எல்ஏ சட்டமன்றத்தில் தெரிவித்தார்.



# சென்னையில் அரன்காவலன் அறக்கட்டளை சார்பில் சிறார் பள்ளியில் பயிலும் 350 மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி

சென்னை, ஆக.18-

சென்னை வண்ணாரபேட்டை தலைமை அலுவமாக கொண்டு இயங்கிவரும் அரன் காவலன் அறக்கட்டளை நிறுவனர் மற்றும் சமூக காவலர் கார்த்திகேயன் தலைமையில் 80வது ஆண்டு சுதந்திர தினவிழாவை முன்னிட்டு B-2 எஸ்பிளனேடு காவல் ஆய்வாளர் மதன், D2-அண்ணாசாலை ஆய்வாளர் ராஜேஸ்வரி N3முத்தியால்பேட்டை ஆய்வாளர் சாந்திரணி, H1வண்ணாரபேட்டை ஆய்வாளர், அருள்மணி முன்னிலையில்

நான்கு சிறார் பள்ளிகளில் பயிலும் சுமார் 350 மாணவர்களுக்கு அவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக நோட்டு புத்கம் மற்றும் கல்வி உபகரணங்கள் இனிப்புப்கள் வழங்கி ஸ்டேன்லி மருத்துவ மணையில் உள்ள ஏழை எளிய நோயாளிகளுக்கு மதிய உணவு அளித்து சுதந்திர தின வாழ்த்துக்களை தொரிவித்து சிறப்பித்தனர்.

# கன்னியாகுமரி மாவட்டம் கருங்கல் அருகே கல்லூரி மாடியில் இருந்து குதித்த மாணவி சாவு : உடலை வாங்க உறவினர்கள் மறுப்பு : ஆர்.டி.ஓ. விசாரணைக்கு உத்தரவு

கருங்கல், ஆக.18-

கருங் கல் அருகே கல்லூரியின் மாடியில் இருந்து குதித்த கல்லூரி மாணவி உயிரிமுந்தார். இதையடுத்து ஆர்.டி.ஓ. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

குமரி மாவட்டம் கருங்கல் குளச்சல் செல்லும் சாலையில் பெத்லேகம் இன்ஜினியரிங் கல்லூரி மற்றும் பெத்லேகம் நர்சிங் கல்லூரி ஆகியவை இயங்கி வருகின்றன. கேரனாவை சேர்ந்த மாணவ, மாணவிகளும் இங்குபடிக்கிறார்கள். கடந்த 1ம்தேதி மாலை நர்சிங் கல்லூரியில் 3ம் ஆண்டு படித்து வரும் கேரள மாநிலம் திருவனந்தபுரம் பகுதியை சேர்ந்த மாணவி ஆன்சிவிஞ்சி குக்கு கல்லூரி கட்டிடத்தின் 3வது மாடியில் இருந்து கீழே விழுந்ததாக கல்லூரி நிர்வாகத்தினர் கருங்கல் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர்.

பின்னர் மேல் சிகிச்சைக்காக கேரளா மாநிலம் திருவனந்தபுரத்தில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட மாணவி ஆன்சிலிஞ்சி நேற்று காலை பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து மாணவியின் தாய் சோனியா (41) கருங்கல் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதில் தனது மகள் கல்லூரியில் செல்போன் பயன்படுத்தியதால் நர்சிங் கல்லூரி முதல்வர் ஷீஜா மாணவிகள் பலர் முன்னிலையில் திட்டி உள்ளார். இதனால் மனமுடைந்து கல்லூரியின் 3 வது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்துள்ளார். எனவே தற்கொலைக்கு காரணமான கருங்கல் கல் லூரி நிர்வாகம், கல்லூரி முதல்வர் ஷீஜா



மீதுதடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறியுள்ளார்.

இதன் அடிப்படை யில் கருங்கல் போலீசார் நர்சிங் கல்லூரி முதல்வர் ஷீஜா மீது வழக்குப்பதிவு செய்தனர். இதற்கிடையே மாணவி உயிரிழந்ததும், அவ ரின் உறவினர்கள் நேற்று மதியம் கருங்கல் காவல் நிலையத்தில் குவித்தனர். காவல்துறை இந்த விவகாரத்தில்விரைந்து கைதுதடவடிக்கை எடுக்க வேண்டும். மாணவியின் உடல் பிரேத பரிசோதனையை வீடியோ பதிவு செய்யவேண்டும். ஆர். டி.ஓ விசாரிக்க வேண்டும் என்றனர்.

அந்த சமயத்தில் அங்கு வந்த போலீசார், காவல் நிலையத்தில் நின்ற மாணவியின் உறவினர்களை வெளியே செல்லுங்கள் என கூறி கடுமையாக திட்டினர். இதனால் ஆத்திரம் அடைந்த மாணவியின் உறவினர்கள். ஒரு உயிரை பலி கொடுத்து விட்டு வந்துள்ள எங்கனை, வெளியே போக சொல்லி விட்டு, கல்லூரி நிர்வாகத்தை காப்பாற்ற நினைக்கிறீர்களா? என கூறி வாக்குவாதம் செய்தனர். போராட்டம் நடத்த போவதாக கூறினர். இதையடுத்து கருங்கல் போலீசார் உயர் அதிகாரிகளுக்கு தகவல் பலியான மாணவி ஆன்சிலிஞ்சிக்கு பத்மநாபபுரம் ஆர்.டி.ஓ. (பொறுப்பு) புஷ்பா தேவி சம் பத்தப்பட்ட கல்லூரிக்கு சென்று விசாரித்தார். தெரிவித்தனர்.

உயிரிழந்த மாணவி, வெளிமாநிலத்தை சேர்ந்தவர் என்பதால் பிரச்னை பெரிதாகாமல் இருக்க உடனடியாக ஆர்.டி.ஓ. விசாரணைக்கு கலெக்டர் உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து பத்மநாபபுரம் ஆர்.டி.ஓ (பொறுப்பு) புஷ்பா தேவி சம்பந்தப்பட்ட கல்லூரிக்கு சென்று அங்குள்ள பணியாளர்கள், உயிரிழந்த மாணவியின் தோழிகளிடம் விசாரித் தார். மாணவி வெள்ளம டம் அருகே உள்ள தனியார் குழந்தைகள் நல மருத்துவமனையில் பயிற்சிக்காக செல்வது வழக்கம். அங்கு சென்று ஆர்.டி. ஓ விசாரித்தார். விசாரணை அறிக்கைக்கு பிறகே உடல் பிரேத பரிசோதனை நடக்கும் என தெரிகிறது. எனவே நேற்று பிரேதபரிசோதனை நடக்கவில்லை. இந்த விவகாரத்தில், கல்லூரி முதல்வர் தலைமறைவாக உள்ளதாகவும் கூறப்படுகிறது.

# ஊத்துக்கோட்டையில் வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பில் 80வது ஆண்டு சுதந்திர தினவிழா

திருவள்ளூர், ஆக.18-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டையில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பில் நீதிமன்ற வளாகத்தில் 80வது ஆண்டு சுதந்திர தின விழா சங்கத்தின் தலைவர் J.முனுசாமி செயலாளர் R.T. மகேந்திரன் பொருளாளர் M.சுந்தராஜ் தலைமையிலும் துணைதலைவர் J.ஜீவா துணைசெயலாளர் S.சாந்த குமார் விளையாட்டு பிரிவு செயலாளர் திலீப்குமார், இணைச்செயலாளர் அ.ராமமூர்த்தி, ஆடிட்டர் எஸ்.சரண்யா, நூலகர் கே.மகேஷ், முன்னிலையில் நடைபெற்றது இவ் விழாவிற்க்கு மாண்புமிகு நீதிபதி V.சுஸ்வத கலந்து கொண்டு தேசிய கெடியேற்றி வழக்கறிர்களின் பிள்ளைளுக்கு பரிசு மற்றும் இனிப்பு வழங்கி வாழ்த்தினார்.





மேலும் இந்நிகழ்வில் மூத்த வழக்கறிஞர்கள் தீனதயாளன், குணசேகரன், பார்த்தீபன், மெய்யூர் அ.வேல்முருகன், பி.எம். சாமி, பாலசுப்பிரமணி, செஞ்சிநாதன், வெற்றி தமிழ், சூரியா, மற்றும் சாமுவேல், தினகரன், வாசுதேவன், வேலு, சுபாஷ், சுகுமார், இளங்கோவன், விவேக்பாபு, நரசிம்மன், பிரகாஷ், டில்லிபாபு மற்றும் 50க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# திருப்பூர்.மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே எலவந்தி ஊராட்சியில் சுதந்திர தின விழாவினை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபைக்கூட்டத்தில் சிறப்பு பார்வையாளராக கலந்து கொண்டார்

திருப்பூர் ஆக.18-

திருப்பூர்.மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், எலவந்தி ஊராட்சி, எ.வடுகபாளையம் கிராம சேவை மையத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் சிறப்பு பார்வையாளராக கலந்து கொண்டார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினமான ஆகஸ்ட் 15 ஆம் நாள் கிராம சபை கூட்டம் நடைபெற்று வருகிறது. .இதன் நோக்கம் ஊராட்சியின் வளர்ச்சிக்கு திட்டமிடுதல் குறித்து பொதுமக்கள் முன்னிலையில் கருத்துருக்கள் பகிர்ந்து கொள்ளுதலே ஆகும். அதன் அடிப்படையில் ஒவ்வொரு முறையும் தங்கள் பகுதியில் நடக்கும் கிராம சபை கூட்டத்தின் போது பொதுமக்கள் முழு அளவில் கலந்து கொண்டு ஊராட்சியின் வளர்ச்சிக்கு மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்தும் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் ஆலோசித்து செயல்படும் போது அந்த ஊராட்சியின் அடிப்படை வசதிகள் உட்பட அனைத்து பணிகளும் செயல்பட கிராமசபை கூட்டம் ஊன்றுகோளாக அமைகிறது.

மேலும், கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல். தூய்மையான குடிநீர் விநியோகத்தினை உறுதி செய்வது குறித்து விவாதித்தல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், வளர்ச்சியடைந்த பாராதம், கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டம், கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம் பற்றிய விழிப்புணர்வு, கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம் தயாரிப்பில் சமூக பங்கேற்பு, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் , சிறு பாசன குளங்கள் ஏரிகள் புதுப்பித்தல், ஜல் ஜீவன் திட்டம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தூய்மை பாரத இயக்க (ஊரகம்) திட்டம் மற்றும் இதர பொருட்கள் குறித்து கிராம சபைக் கூட்டத்தில் குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும், அரசு அளிக்கின்ற அனைத்து நலத்திட்டங்களையும் பொதுமக்கள் நல்லமுறையில் பயன்படுத்திக் கொண்டு பயன்பெற வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே தெரிவித்தார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சியர் தலைமையில் காசநோய் விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு, தூய்மைப்பணியாளர்களை கௌரவிக்கும் பொருட்டு பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, திருப்பர் மாவட்டம், பல்லடம் வட்டம், அய்யம்பாளையம் அருள்மிகு வாழைத் தோட்டத்து அய்யன் திருக்கோவிலில் நடைபெற்ற பொதுவிருந்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) மதுரா, இணை ஆணையர் (இந்து சமய அறநிலையத்துறை) ஹர்சினி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கமலக்கண்ணன், உதவி திட்ட அலுவலர் (உட்கட்டமைப்பு2) திரு. சரவணன், பொங்கலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வேலுசாமி, திரு,பாரத் கண்ணன், உதவி பொறியாளர் கிருஷ்ணமூர்த்தி, துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே திருப்பூர் மாநகராட்சி, ஸ்ரீ வேலாயுதசாமி திருமண மண்டபத்தில் அரசு துறைகளில் சிறப்பாக பணியாற்றிய ஊழியர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திருமதி வாணி ஈஸ்வரி உள்ளிட்ட அரசு துறை அலுவலர்கள் மற்றும் ரோட்டரி சங்க நிர்வாகிகள் ஆகியோர் உள்ளனர்.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் திருப்பூர் மாநகராட்சி, மாநாட்டு அரங்கில் திடக்கழிவு மேலாண்மை செயல்படுத்துதல் தொடர்பாக பெருமளவில் கழிவு உருவாக்கும் நிறுவனங்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் துணை மேயர் திரு.ரா.பாலசுப்பிரமணியம், மாநகராட்சி ஆணையாளர் .எம்.பி.அமித் திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) வாணி ஈஸ்வரி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஸ்ரீபுரம் அறக்கட்டளை சார்பில் சமூக நலப்பணிகளுக்காக ரூ.2.00 இலட்சத்திற்கான காசோலையை ஸ்ரீபுரம் அறக்கட்டளையின் தலைவர் சண்முகம் வழங்கினார்கள்.



■ சிவகங்கை மாவட்டம் அழகப்பாபுரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இலுப்பக்குடி கோட்டை கரை முனீஸ்வரன் கோவில் அருகில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை (Ganesh Pocket& Cool lip pocket) விற்பனைக்காக வைத்திருந்த தேவகோட்டையை சேர்ந்த நந்தகுமார் மற்றும் காரைக்குடியைச் சேர்ந்த ரிஷிஷாகர் ஆகிய இருவர் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து சுமார் 3.112 கிலோ கிராம் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை பறிமுதல் செய்தனர். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா சோதனையில் ஈடுபட்ட தலைமை காவலர்கள் தனபாலன், சிலம்பரசன், செல்வராஜா, மற்றும் முதல் நிலைக் காவலர் அருண் ஆகியோரை பாராட்டினார்.




■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறை தீர்க்கும் முகாமில், கால் துண்டிக்கப்பட்ட 2 மாற்றுத்திறனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் மூலம் ரூ.49,600 மதிப்பில் செயற்கை கால்களை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேற்று (17.08.2026) வழங்கினார். உடன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் முருகேசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.




## ஆங்காடு ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

மாதவரம், ஆக.18-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் ஆங்காடு ஊராட்சியில் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் ஊராட்சி செயலர் தனசேகரன் தலைமையில் ஆங்காடு ஊராட்சி சிறுனியம் கிராமத்தில் உள்ள ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

சோழவரம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி துணை அலுவலர் பற்றாளர் விஜயலட்சுமி, கிராம நிர்வாக அலுவலர் ரவீந்திரன், கிராம உதவியாளர்கள் மஞ்சுளா, பேகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக தேசிய கொடியினை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினர். பின்னர் கூட்டத்தில் காசநோய், எச்.ஐ.வி நோய் விழிப்புணர்வு ,குடிநீர்வசதி, சாலைவசதி உள்ளிட்ட பல்வேறு பல்வேறு பணிகள் மேற்கொள்வது குறித்து ஆலோசிக்கப்பட்டது. பின்னர் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில் ஊராட்சி பணியாளர்கள், மகளிர் குழுவினர் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

present sale for
all over Tamil Nadu
தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது




■ தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் சென்னை, தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், சிறந்த சமூக சேவைக்காக மதுரை மாவட்டம், உசிலம்பட்டியைச் சேர்ந்த செல்வி கா.சிந்தாவிற்கு முதலமைச்சரின் மாநில இளைஞர் விருதினை வழங்கினார்.அதனைத் தொடர்ந்து, முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது பெற்ற செல்வி கா.சிந்தா மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. நிஷாந்த் கிருஷ்ணாவை, சந்தித்து வாழ்த்து பெற்றார்.

## கிராமசபை கூட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசனை

மதுரை, ஆக.18-

இந்தியாவின் 80 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு மதுரை மாவட்டத்தில் 13 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட கிராம ஊராட்சிகளில் கிராமசபை கூட்டங்கள் நடைபெற்றன.

வாடிப்பட்டி ஒன்றியம் தென்கரை ஊராட்சியில் ஊராட்சி செயலர் முனியராஜ் தீர்மானங்களை வாசித்து பொதுமக்களுக்கு விளக்கினார். தூய்மையான குடிநீர், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம், அண்ணா மறுமலர்ச்சி திட்டம், குளங்கள்ஏரிகள் புதுப்பித்தல், ஜல் ஜீவன் திட்டம், தூய்மை பாரத இயக்கம் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டது.

வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜமார்த்தாண்டம், சதீஷ்குமார், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பூர்ணிமா, ரம்யா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பாண்டி கோயில் கடைகளில் மாநகராட்சி ஆணையாளர் அதிரடி ஆய்வு : ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற உத்தரவு தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக், பேப்பர் கப்புகள் பறிமுதல்

மதுரை, ஆக.18-

மதுரை மாநகராட்சி மண்டலம் 1, பாண்டி கோயில் பகுதியில் உள்ள கடைகளில் மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., நேற்று அதிரடி ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, பொதுமக்கள் நடந்து செல்லும் நடைபாதைகளை ஆக்கிரமித்து, கடைகளுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தைவிட கூடுதலாக பயன்படுத்தப்பட்ட பகுதிகளை பார்வையிட்ட ஆணையாளர், அவற்றை உடனடியாக அகற்ற அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும், கடைகளின் உரிமம் மற்றும் விற்பனை செய்யப்படும் பொருட்களின் காலாவதி தேதிகளையும் ஆய்வு செய்தார்.

அப்பகுதியில் உள்ள உணவகங்கள் மற்றும் கடைகளில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பைகள், பேப்பர் கப்புகளில் உணவு மற்றும் தேநீர் வழங்கப்படுவது கண்டறியப்பட்டு, அவை பறிமுதல் செய்யப்பட்டன. தொடர்ந்து தடை செய்யப்பட்ட பொருட்களை பயன்படுத்தும் கடைகள் மற்றும் உணவகங்களுக்கு அபராதம் விதிக்கவும் ஆணையாளர் உத்தரவிட்டார்.





உணவகங்களை தூய்மையாகவும் சுகாதாரமாகவும் பராமரிக்க வேண்டும் என்றும், நடைபாதைகளில் ஆக்கிரமிப்புகள் ஏற்படாத வகையில் மாநகராட்சி பணியாளர்கள் தினமும் கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

கழிவுநீர் நிலையத்திலும் ஆய்வு முன்னதாக, மண்டலம் 1, வார்டு 10, கற்பக நகர் 3வது தெருவில் செயல்பட்டு வரும் கழிவுநீர் ஏற்று நிலையத்தை ஆணையாளர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். வார்டுகள் 10, 12, 14, 15 பகுதிகளில் இருந்து வரும் கழிவுநீர் பாதாள சாக்கடை குழாய்கள் மூலம் கற்பக நகர் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து சுத்திகரிப்பு செய்யப்பட்டு மாட்டுத்தாவணி கழிவுநீர் ஏற்று நிலையத்திற்கு அனுப்பப்படுவது குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

கழிவுநீர் குழாய்களில் உடைப்பு அல்லது அடைப்பு ஏற்பட்டால், பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படாத வகையில் உடனடியாக பம்பிங் செய்தோ அல்லது கழிவுநீர் சுத்திகரிப்பு வாகனங்கள் மூலமாகவோ சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என உத்தரவிட்டார்.

மேலும், கற்பகம் நகர் 9வது தெருவில் வீடுகளில் இருந்து மாநகராட்சி வாகனங்கள் மூலம் குப்பைகள் சேகரிக்கப்படுவதை ஆய்வு செய்தார். பொதுமக்கள் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தனித்தனியாக தரம் பிரித்து, குப்பை சேகரிக்க வரும் மாநகராட்சி வாகனங்களில் மட்டுமே வழங்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

குப்பைகளை வேறு இடங்களில் கொட்டுவதைத் தவிர்ப்பது குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துமாறும் பணியாளர்களுக்கு ஆணையாளர் அறிவுறுத்தினார்.

ஆய்வின்போது நகர திட்டமிடுநர் முரளி, உதவி செயற்பொறியாளர் காமராஜ், சுகாதார அலுவலர் ராஜ்கண்ணன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161